தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 12-10-2015

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## பூச்சி மற்றும் நோய் கட்டுப்பாடு பற்றிய அக்டோபர் (2015) மாதத்திற்கான முன்னறிவுப்பு

### நெல்

திருநெல்வேலி, சேலம், கன்னியாகுமரி, தேனி, திருவாரூர், விழுப்புரம், தருமபுரி, மதுரை, தஞ்சாவூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் நெல்லில் பரவலாக இலைச்சுருட்டுப்புழு மற்றும் தண்டு துளைப்பான் தாக்குதல் காணப்படுகிறது. இவற்றைக் கட்டுப்படுத்த விவசாயிகள் வேப்பங்கொட்டை சாறு 5% தயாரித்து ஒட்டும் திரவம் லிட்டருக்கு ஒரு மில்லி வீதம் கலந்து தெளிக்கவும். அந்துப்பூச்சிகளின் நடமாட்டத்தை கண்டறிய விளக்குப் பொறிகள் ஏக்கருக்கு ஒன்று என்ற எண்ணிக்கையில் அமைக்கவும். அதிக சேதம் இருக்கும் பட்சத்தில் பாஸ்போமிடான் 40 எஸ் எல் 225 மி.லி அல்லது புரோபனோபாஸ் 50 ஈ.சி ஏக்கருக்கு 400 மி.லி. தெளிக்கவும்.

நெல் குலை நோய் தாக்குதல் பரவலாக கடலோரப் பகுதியில் உள்ள மாவட்டங்களில் தென்படுகிறது. நோய்த்தாக்குதல் கண்டவுடன் ஹேக்சகோனஸால் (0.25%) என்ற மருந்தை ஒரு வாரம் இடைவெளியில் இருமுறை தெளிக்கவும். மேலும் சூடோமோனாஸ் புளுரசன்ஸ் (0.2%) பதினைந்து நாட்களுக்கு ஒருமுறை தெளித்து மகசூலை பெருக்கவும்.

### பருத்தி

தருமபுரி மற்றும் மதுரை மாவட்டங்களில் சாறு உறிஞ்சும் பூச்சிகளின் நடமாட்டம் தென்படுகிறது. ஆதலால் விவசாயிகள் ஏக்கருக்கு 5 என்ற அளவில் மஞ்சள் ஒட்டும் பொறி வைத்து பூச்சிகளின் நடமாட்டத்தை கண்காணிக்கவும்.

பருத்தி காய்புழுக்களை கட்டுப்படுத்த, ஏக்கருக்கு 5 என்ற அளவில் பருத்தி காய்ப்புழுக்கு தகுந்தார் போல் இனக்கவர்ச்சி பொறிகளை வைக்க வேண்டும். தேவைப்பட்டால் இன்டாக்சாபார்ப் 14.5 எஸ்.சி 200 மிலி / ஏக்கர் (அல்லது) ட்ரைஅசோபாஸ் 40 இ.சி 800 மில்லி/ஏக்கர் என்ற அளவில் தெளிக்க வேண்டும்.

### தக்காளி

கோயம்புத்தூர், திருப்பூர், ஈரோடு மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் தக்காளி இலைக்கருகல் நோய்த் தாக்குதல் தென்படுகிறது. ஆதலால் விவசாயிகள் மான்கோசாப் என்ற

மருந்தை, ஒரு லிட்டர் தண்ணீருக்கு 2 கிராம் என்ற விகிதத்தில் கலந்து வாரமிருமுறை தெளிக்கவும்.

**மஞ்சள்**

ஈரோடு, கோயம்புத்தூர் மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் மஞ்சள்இலைப்புள்ளி நோய்த் தாக்குதல் தென்படுகிறது. இவற்றைக் கட்டுப்படுத்த மான்கோசாப் 2 கிராம் ஒரு லிட்டர் தண்ணீருக்கு அல்லது புரப்பிகோனசோல் (0.2%) என்ற மருந்தை ஒரு வாரம் இடைவெளியில் இருமுறை தெளிக்கவும்.

**கரும்பு**

சேலம், சிவகங்கை, தேனி, திருவண்ணாமலை, புதுக்கோட்டை மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் பொதுவாக தண்டுத்துளைப்பான் தாக்குதல் பொருளாதார சேதநிலைக்கு குறைவாகவே தென்படுகிறது. இருந்தாலும் இவற்றைக் கட்டுப்படுத்த முட்டை ஒட்டுண்ணி ட்ரைக்கோகிரமா (1 சிசி) ஒரு ஏக்கருக்கு பயன்படுத்தவும். இதனை 6 முறை 15 நாட்கள் இடைவெளியில் பயன்படுத்தவும்.

**நிலக்கடலை**

ஈரோடு, சேலம், சிவகங்கை, திருவண்ணாமலை, விழுப்புரம், புதுக்கோட்டை மற்றும் இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் இலைச்சுருட்டுப்புழு தாக்குதல் பரவலாகத் தென்படுகிறது. இவற்றின் நடமாட்டத்தை விளக்குப்பொறி வைத்து கண்காணிக்கவும். மழை குறைவாக உள்ள பகுதிகளில் அதிக தாக்குதல் தென்பட வாய்ப்புள்ளது. இவற்றை கட்டுப்படுத்த வேப்பங்கொட்டை சாறு 5% தயாரித்து அதனுடன் ஒட்டும் திரவம் 1 மில்லி , லிட்டருக்கு கலந்து தெளிக்கவும். மேலும் வேரழுகல் நோய்த்தாக்குதல் உள்ள பகுதிகளில் கார்பன்டாசிம் (0.1%) மருந்தை வேர்கள் நனையுமாறு ஊற்றவும்.

**மக்காச்சோளம்**

கோயம்புத்தூர், திருப்பூர், மதுரை, புதுக்கோட்டை மற்றும் தருமபுரி மாவட்டங்களில் தண்டு துளைப்பான் தாக்குதல் தென்படுகிறது. இவற்றின் அந்து பூச்சிகளின் நடமாட்டத்தை விளக்குப்பொறி வைத்து கண்காணிக்கவும். தேவைப்படின் வேப்பங்கொட்டை சாறு 5% மற்றும் ஒட்டுந்திரவம் 1 மி.லி ஒரு லிட்டர் கலவைக்கு என்ற அளவில் சேர்ந்து பயன்படுத்தவும்.

**தகவல்**

இயக்குநர்,
பயிர் பாதுகாப்பு மையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் – 641 003.
தொலைபேசி: 0422-6611237

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்